DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, DENKANIKOTTAI
PROSECUTION WITNESS

SC. No. 130/2021 Crime No. 54/2017 Station Rayakottai PS

| Name | Lw11 /Pw 9/ Tr.Mahadevan/Inspector of Police | Village | |
|---|---|---|---|
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | |

**04.03.2025.**

**எதிரிகள் ஆஜர் .**

**முதல் விசாரணை**

சத்தியமாக சொல்கிறேன்.

நான் தற்போது ஓசூர் காவல் கட்டுப்பாட்டு அறையில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன்.

கடந்த 2017 ம் வருடம் ராயக்கோட்டை காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது 19.02.2017 ம் தேதி காலை சுமார் 9 மணிக்கு நான் நிலையத்தில் இருந்தபோது இராயக்கோட்டை GH ல் வந்த தகவலின் பேரில் தலைமைக்காவலர் முருகனை வாக்குமூலம் பதிவு செய்ய அந்த மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன்.

அவர் வாதியிடம் வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து 17 மணிக்கு அளித்தார்.

அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் நான் CSR மனு 34/2017 ல் பதிவு செய்தேன்.

**( நீதியின் பால் கருதி சட்டபிரிவு 165 இ.த.ச.ன் கீழ் கண்ட நீதிமன்ற கேள்விகள்.)**

1. ஒரு புகாரோ அல்லது புகார் வாக்குமூலம் பெற்று நிலையத்தில் உங்கள் முன் அளித்தால் நீங்கள் முதல் தகவல் அறிக்கை தான் தாக்கல் செய்யவேண்டும் ஏன் அவ்வாறு இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யவில்லை

பதில்: வாதி Civil dispute ல் கம்ளயென்ட் கொடுத்ததால் CSR போட்டேன்.

2. Civil dispute வழக்குகளில் CRS or FIR பரிவு செய்ய யார் உங்களுக்கு அனுமதி கொடுத்தார்கள் அல்லது யார் உத்தரவின்பேரில் CSR போட்டீர்கள்.

பதில்: எனது காவல் ஆய்வாளர் தான் உத்தரவிட்டார்.

3. உங்கள் காவல் ஆய்வாளர் Civil dispute க்கு CSR போடுவதற்கு அதிகாரம் பெற்றவரா

பதில் : எனது ஆய்வாளர் கூட Civil dispute க்கு CSR போட அதிகாரம் இல்லை அவர் தனது அதிகாரத்தை துஷ்பிரோயகம் செய்து கொடுத்த உத்தரவின் பேரில் நானும் போட்டேன்.

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

பிறகு நான் பதிவு செய்த CSR நானே பரிசீலனை செய்து அது Civil Dispute புகாராக இருந்ததால் எதிரிகள் வாதியை தாக்கி கொலை முயற்சி செய்ததாக முதல் கட்ட விசாரணையில் தெரியவந்ததால் நான் முதல் தகவல் அறிக்கை ச.பி.341, 324, 427, 506(2) இ.த.ச. கீழ் பதிவு செய்தேன்.

நான் வழக்கை எனது புலன் விசாரணையில் எடுத்துக்கொண்டு நான் முதலில் சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இட சாட்சிகள்
இந்த சாட்சி மூலமாக FIR **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**அரசு தரப்பு வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

**ஓம்./-திரு.ஆர்.ஹரிஹரன்.,எம்.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**